WWW.ASKNETWORK.NET

Tamil

/ASKING ... FOR THOSE FROM EVERY NATION, TRIBE, PEOPLE & LANGUAGE/

சகலஜாதிகள், கோத்திரங்கள், ஜனங்கள், பாஷைக்காரர்கள் ஆகியஅனைவருக்காகவும் கேட்டல்...

ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்.
— வெளிப்படுத்தின விசேஷம் 22:17

"சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கும்" அந்த நாளைக் காண நாம் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம். **வெளிப்படுத்தின விசேஷம் 7:9.** அந்த நாளில் நாம் கேட்பது முடிவுக்கு வந்திருக்கும். ஆனால் அதுவரை, அந்த மகத்தான நாள் வருவதற்காக நம்முடைய ஜெபங்கள் நம்மை ஆயத்தம் செய்வதாக இருக்க வேண்டும்!

"ஜனங்கள், கோத்திரங்கள், பாஷைக்காரர்கள், ஜாதிகள்" என்ற இந்த நான்கு வார்த்தைகள் வெளிப்படுத்தின விசேஷத்தில் ஐந்து முறை குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் ஒவ்வொரு முறையும் அவற்றின் வரிசை மாறுகிறது; இதிலிருந்து இந்த நான்கும் தேவனுடைய பார்வையில் சமமான முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை அறிந்துகொள்ளலாம். **வெளிப்படுத்தின விசேஷம் 5:9; 7:9; 11:9; 13:7; 14:6.**

தேசங்களுக்காகக் கேட்டல்

வேதாகமத்தில் தேசங்களைப் பற்றிய 600 குறிப்புகள் காணப்படுகின்றன. இது ஒவ்வொரு தேசத்திற்காகவும் தேவன் ஒரு குறிப்பிட்ட திட்டத்தையும், மீட்பின் நோக்கத்தையும் கொண்டிருக்கிறார் என்பதைக் காண்பிக்கிறது. தற்போது உலகில் அங்கீகரிக்கப்பட்ட 195 சுதந்திரமான இறையாண்மை கொண்ட தேசங்கள் உள்ளன. இந்தச் சூழலில், புவியியல் எல்லைகளால் வரையறுக்கப்பட்டு, ஒரு ஆட்சி அமைப்பின் கீழ் செயல்படும் நிலப்பகுதியை தேசம் என்று விவரிக்கலாம்.

உங்கள் சொந்த தேசத்திற்காகக் கேளுங்கள். *நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்; நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்ய வேண்டும். நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.*
1 தீமோத்தேயு 2:1–4

ஒவ்வொரு தேசத்திலும் உறுதியான சீஷர்களைக் கொண்ட சபை ஏற்படுத்தப்பட ஜெபியுங்கள்: *ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்; இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்.*
ஆமென். மத்தேயு 28:19–20

தேசங்களுக்காக ஜெபிப்பதற்கென்று ஒரு திட்டத்தைப் பின்பற்றுங்கள். operationworld.org என்ற வலைதளத்தில் இதற்கான பல பயனுள்ள உபகரணங்கள் உள்ளன.

ஜனங்களுக்காகக் கேட்டல்

கர்த்தர் யாக்கோபிடம், “பூமியிலுள்ள சகல வம்சங்களும் உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் ஆசீர்வதிக்கப்படும்” என்று சொன்னார். அவருடைய சந்ததியினர் யூத ஜனங்களாக இருந்தனர். ஜனக்கூட்டத்தை அடையாளப்படுத்துவதற்கான ஒரு வழி, இன அடிப்படையில் அவர்களை வகைப்படுத்துவதாகும். சில சமயங்களில் இது கண்டங்களின் அடிப்படையிலான வகைப்பாட்டுடனும் ஒத்துப்போகும். ஜெபிப்பதற்காக வெவ்வேறு ஜனக்கூட்டங்களை அடையாளம் காண இது மிகவும் உதவியாக இருக்கும். அவர்களுடைய தனித்துவமான பண்புகளும் கலாச்சாரங்களும் தேவனுடைய மகிமைக்காக முழுமையாக வெளிப்படும்படி அவர்களுக்காக தேவனிடம் கேட்கலாம். எல்லா ஜனங்களும் தேவனுக்குச் சொந்தமானவர்கள் என்பதை உணர்ந்து தேவனை ஆராதியுங்கள்.

இந்த வெளிப்பாடு எல்லா ஜனங்களுக்கும் கிடைக்கும்படி ஜெபியுங்கள். *பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது.* ***சங்கீதம் 24:1***

ஜனக்கூட்டங்களுக்கு இடையில், குறிப்பாக, உலகெங்கிலும் உள்ள சபைகளில், காணப்படும் இனப்பிரிவினைகள் நீங்கும்படி ஜெபியுங்கள். *சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.* ***மத்தேயு 5:9***

ஒவ்வொரு ஜனக்கூட்டத்திற்கும் வல்லமையோடு சுவிசேஷம் .சென்றடையும்படி அறுப்பின் ஆண்டவரிடம் கேளுங்கள் ,*புறஜாதிகளே, எல்லாரும் கர்த்தரைத் துதியுங்கள்; ஜனங்களே எல்லாரும் அவரைப் புகழுங்கள்.* ***ரோமர் 15:11***

பாஷைக்காரருக்காகக் கேட்டல்

இன்றைய உலகில் குறைந்தது 6,800 பாஷைகள் பேசப்படுகின்றன. இதில், வேதாகமத்தின் எந்தப் பகுதியும் மொழிபெயர்க்கப்படாத பாஷைகள் 2,000-க்கும் அதிகமாக உள்ளன. இந்தப் பாஷைகளில் வேதாகம மொழிபெயர்ப்புப் பணி தொடங்கப்பட வேண்டும். இது, சுமார் 340 மில்லியன் மக்களைப் பாதிக்கிறது.

ஒவ்வொருவரும் தங்கள் சொந்தப் பாஷையில் சுவிசேஷத்தைக் கேட்கும்படி, எல்லாப் பாஷைகளிலும் வேதாகமம் மொழிபெயர்க்கப்படுவதற்காக ஜெபியுங்கள். *அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்?* ***ரோமர் 10:14***

தேவன் wycliffe.org, pioneerbible.org, lbt.org ஆகிய ஊழியங்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி, அவர்களுடைய பணிகளை வாய்க்கப் பண்ணும்படி ஜெபியுங்கள். *எங்கள் தேவனாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள் (அவர்கள்) மேல் இருப்பதாக; எங்கள் (அவர்கள்) கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தும்; ஆம், எங்கள் (அவர்கள்) கைகளின் கிரியையை எங்களிடத்தில் (அவர்களிடத்தில்) உறுதிப்படுத்தியருளும்.* ***சங்கீதம் 90:17***

பாபேல் கோபுரம் கட்டப்பட்டபோது தேவன் கொடுத்த நியாயத்தீர்ப்பின் விளைவுகளை மாற்றியமைக்கும்படி தேவனிடம் கேளுங்கள். *பூமியெங்கும் வழங்கின பாஷையைக் கர்த்தர் அவ்விடத்தில் தாறுமாறாக்கினபடியால், அதின் பேர் பாபேல் என்னப்பட்டது; கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின் மீதெங்கும் சிதறிப்போகப் பண்ணினார்.* ***ஆதியாகமம் 11:9***

கோத்திரங்களுக்காகக் கேட்டல்

இஸ்ரவேல் என்ற ஒரே தேசத்திற்குள் பன்னிரண்டு கோத்திரங்கள் இருந்தன. உலகின் பல தேசங்களிலும் உள்நாட்டுக் கோத்திர அமைப்புகள் காணப்படுகின்றன. பெரும்பாலும் குடும்பங்களிலிருந்தோ அல்லது நெருங்கிய உறவுகளைக் கொண்ட குழுக்களிலிருந்தோ கோத்திரங்கள் தோன்றியிருக்கின்றன. அவர்களுடைய பாஷை, வாழ்க்கைமுறை அல்லது புவியியல் இருப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களை வேறுபடுத்தி அடையாளம் காணலாம். கோத்திரங்கள் பல தேசங்களுக்குள் சுவிசேஷத்தை இன்னும் கேள்விப்படாத ஜனக்கூட்டங்களாக இருப்பது மிகவும் பொதுவானதாக உள்ளது. இன்னும் சுவிசேஷம் சென்றடையாத ஜனக்கூட்டங்களுக்காக ஜெபிப்பதில் பங்குகொள்ளுங்கள். சுவிசேஷம் சென்றடையாத ஜனக்கூட்டங்கள் (UPG) தற்போது சுமார் 7,000 உள்ளன. அதாவது, உலகிலுள்ள மொத்த ஜனக்கூட்டங்களில் 41 சதவீதத்தினருக்கு இன்னும் சுவிசேஷம் சென்றடையவில்லை. இது சுமார் 284 கோடி மக்களைக் குறிக்கிறது. www.joshuaproject.net என்ற வலைதளத்தில் உங்கள் பெயரைப் பதிவு செய்தால், ஒவ்வொரு நாளும் ஜெபிப்பதற்காக சுவிசேஷம் சென்றடையாத வெவ்வேறு ஜனக்கூட்டத்தைப் பற்றிய தகவல்களை மின்னஞ்சல் மூலம் பெற்றுக்கொள்ளலாம். தொழில்நுட்பம் மற்றும் இணையவெளி என்ற வசதிகளைப் பயன்படுத்தி, சுவிசேஷம் இன்னும் அதிக வேகத்தோடும், பயனுள்ள விதத்திலும் பூமியின் கடைசிப் பகுதிகள் வரை சென்றடையும்படி ஜெபியுங்கள். பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும்; ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமது சமுகத்தில் தொழுதுகொள்ளும். *ராஜ்யம் கர்த்தருடையது; அவர் ஜாதிகளை ஆளுகிறவர்.* ***சங்கீதம் 22:27–28***

ஜாதிகளுக்குள் அவருடைய மகிமையையும், சகல ஜனங்களுக்குள்ளும்
அவருடைய அதிசயங்களையும் விவரித்துச் சொல்லுங்கள்.
1 நாளாகமம் 16:24

ஒவ்வொரு தேசத்திலிருந்தும், கோத்திரத்திலிருந்தும், ஜனக்கூட்டத்திலிருந்தும், பாஷைக்காரர்களிலிருந்தும் மக்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிந்து, இரட்சிப்பைப் பெறும் வரை தொடர்ந்து ஜெபிப்பதன் மூலம் ஆஸ்க் வலையமைப்பு தன் தேவ அழைப்பையும் நோக்கத்தையும் நிறைவேற்ற முடியும். ஆமென்.